மிகேலுக்காக ஒரு கரடி

கதை: எலைன் மேரி ஆல்ஃபின்
வரைபடம்: ஜோன் சாண்டின்
தமிழில்: வெ.சு.காயத்ரி



மிகேலுக்காக ஒரு கரடி

கதை: எலைன் மேரி ஆல்ஃபின்

வரைபடம்: ஜோன் சாண்டின்

தமிழில்: வெ.சு.காயத்ரி




மிகேலுக்காக ஒரு கரடி

கதை: எலைன் மேரி ஆல்ஃபின்

வரைபடம்: ஜோன் சாண்டின்

தமிழில்: வெ.சு.காயத்ரி





பொருளடக்கம்





கொரில்லாக்கள் என்பவர்கள் ஓர் நாட்டின் இராணுவத்தின் மீது திடீர்த் தாக்குதல்களை நடத்த வல்ல சுதந்திரமான படைவீரர்களின் குழுக்கள் ஆவர்.



அத்தியாயம் 1: சந்தை நாள்

ஃபெலிசிடாட் என்ற சிறிய கிராமத்தில் அன்று சந்தை நாளாக இருந்தது. இது எல் சல்வடாரிலுள்ள ஒரு சிறிய கிராமம் ஆகும். "பாக்கோ! சீக்கிரம்! நாம் அப்பாவுடன் சந்தைக்குப் போகிறோம்." " என்று மரியா தன் பொம்மை கரடியிடம் சொன்னாள்.



மரியா திண்ணைக்கு
ஓடி வந்தாள்.
மர மேசையும்
நாற்காலியும் காணாமல்
போயிருந்தன.
அப்பாவின் ஆடும்
நாற்காலி மட்டும்
அங்கே இருந்தது.

"அம்மா எங்கே
உட்காருவார் என்று
நாம் கேட்க
மாட்டோம்.
அப்பாவின் மடியில்
நமக்கு இன்னும் இடம்
இருக்கும்," என்று
மரியா பாக்கோவிடம்
சொன்னாள்.



"மரியா, எங்கே இருக்கிறாய்?"
என்று அப்பா அழைத்தார். "
நில்லுங்கள்! அப்பா, என்னை
விட்டுவிட்டுப் போகாதீர்கள்!" "
என்று அவள் கத்தினாள்.




மரியா அவர்களுடைய வண்டியில் ஏறினாள். அவள் அப்பாவின் பழைய உபகரணங்களைப் பார்த்தாள். அவை இல்லாமல் அப்பாவால் எப்படி வேலை செய்ய முடியும்?

"நாம் இப்போது கிளம்ப முடியாது," என்றார் அப்பா. "உன் அம்மா இன்னும் பேசிக்கொண்டிருக்கிறார்."

அம்மா முகம் சுளித்தார். "இது வேடிக்கையல்ல" என்று அவள் சொன்னாள். சந்தையில் நீ குழந்தைகளுக்காகப் பால், கூடவே கொஞ்சம் வெண்ணெய் மற்றும் முட்டைகளையும் பண்டமாற்றம் செய்ய முயற்சிக்க வேண்டும்.





அம்மா குழந்தை டினோவைத் தூக்கிக்கொண்டு பெருமூச்சு விட்டார். "நம்மிடம் கொஞ்சம் கோழிகள் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்," என்றாள் அவள்.

"ஆமாம்" என்று அப்பா சிரித்துக்கொண்டே சொன்னார். "ஒரு பசுவும் கூடவே இந்தக் கிழட்டுக் கோவேறுக்கழுதைக்குப் பதிலாக ஒரு குதிரையும இருந்தால் நன்றாக இருக்கும்."


"எல்லாமே வேடிக்கையானவை அல்ல!" என்று அம்மா சொன்னார். "யாராவது நம்முடைய பொருட்களைப் பண்டமாற்று செய்துகொள்ள முன்வருவார்கள் என்று நம்புகிறேன்." என்றார் அப்பா.

"கவலைப்படாதீர்கள், அம்மா,"
என்றாள் மாரி.
,"நமது அழகான மேசை விரிப்பை,
வண்ணப் பறவைகள் பதித்த
அந்தச் சால்வையயை, நமது
மேசையை, நாற்காலியையும்,
அப்பாவின் பழைய கருவிகளையும்
கூட யாராவது விரும்புவார்கள்.,"
என்று மரியா சொன்னாள்.
"நிச்சயமாக, யாராவது நம்முடைய
பொருட்களை விரும்புவார்கள்.
மேலும் அவர், வியாபாரம்
செய்வதற்கு ஏராளமான பாலும்
வெண்ணெயும் கொண்ட ஒரு பால்
வியாபாரியாக இருப்பார்", என்று
அப்பா அம்மாவிடம் சொன்னார்.

"மாவு வாங்க வேண்டும்.
ஞாபகம் வச்சுக்கோ. கூடவே
கொஞ்சம் சர்க்கரையும்
எடுத்துக்க முயற்சி பண்ணு!" "
என்று அம்மா கூறினார்.



"கவலைப்படாதீர்கள்
,அம்மா," என்று மரியா
உறுதியளித்தாள். "நாம்
எல்லாவற்றையும்
பெறுவோம்!" என்றாள்.



அத்தியாயம் 2

போராளிகள்



வண்டி மண் சாலையில் குலுங்கிக் கொண்டு சென்ற போது, அப்பா தலையை அசைத்தார்.

உன் அம்மா விரும்பும் எல்லாவற்றையும் நாம் பெற்றுத் தர முயற்சிப்போம், ஆனால் பண்டமாற்றுப் பெற சரியான பொருட்களைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கிறது.

"ஆனால் நமக்கு சந்தையிலிருந்து பொருட்கள் தேவைப்படுகின்றன," என்றாள் மரியா. “நமக்குப் பொருட்கள் தேவை. ஆனால், அவற்றுக்கு ஈடாகப் பரிமாற்றம் செய்ய நம்மிடம் ஏதாவது பொருள் இருக்க வேண்டும்” என்றார் அப்பா.



எனக்கு வேலை கிடைக்காததால் பணத்தால் பொருட்களை வாங்க முடியவில்லை. நான் அரசாங்கத் தொழிற்சாலையில் வேலை செய்தால், போராளிகள் என்னைத் தண்டிப்பார்கள்.

ஆனால், போராளிகளுக்கு உதவும் நபர்களுக்காக நான் வேலை செய்தால், அரசாங்கம் என்னைக் கைது செய்துவிடும். எனவே, சந்தையிலிருந்து பொருட்களைப் பெற நாம் பண்டமாற்று செய்தாக வேண்டும்.” என்றார்.



"என்னால் உதவ முடிந்தால் நன்றாக இருக்கும், அப்பா," என்று மரியா மென்மையாகக் கூறினாள். அப்பா புன்னகைத்து அவளை அணைத்துக்கொண்டார். “அட! நீதான் உதவுகிறாயே!!" என்றார் அவர். "நீயும் உன் குட்டி கரடியும் என்னைச் சிரிக்க வைக்கிறீர்கள்."



அப்பா போராளிகளைக் கடந்து ஃபெலிசிடாட் நகரின் சந்தைச் சதுக்கத்திற்குள் வண்டியை ஓட்டிச் சென்றார்.




“போராளிகள் கொடூரமானவர்களாகத் தெரியவில்லை," என்று மரியா கூறினாள். ‘‘நாங்கள் வண்டியில் கடந்து சென்றபோது அவர்கள் என்னைப் பார்த்துப் புன்னகைத்தார்கள். ஆனால் பாக்கோவுக்கு அவர்களுடைய துப்பாக்கிகள் பிடிக்காது”.





அத்தியாயம் 3
கடினமான வர்த்தகம்



சந்தையில், மரியா
பாக்கோவிடம், "நம்
குடும்பத்திற்கு உதவ நாம்
என்ன செய்யலாம்?
அப்பாவைச் சிரிக்க
வைப்பது மட்டும் போதாது,"
என்றாள். அவள் மக்களை
நம்பிக்கையுடன் பார்த்தாள்.



ஒருவன் அவர்களுடைய மேசை விரிப்பைப் பார்த்தான்."அழகாக இருக்கிறது" என்று அவன் சொன்னான். "உன் மனைவியின் மேசைக்கா?" என்று அப்பா கேட்டார். “அதற்குப் பதிலாக ஒரு மூட்டை மாவு தருகிறேன்," என்றான் அந்த மனிதன். அப்பா தலையை அசைத்தார். "கூடவே கொஞ்சம் சர்க்கரையும்," என்றான் அந்த மனிதன்.

" ஒப்புக்கொள்கிறேன்!" என்றார் அப்பா. "



அப்பா அவனுக்கு மேசை விரிப்பைக் கொடுத்துவிட்டு, மாவு மற்றும் சர்க்கரையை வண்டியில் ஏற்றினார்.

"அம்மா மகிழ்ச்சியடைவார்,
அதைத் தைப்பதற்காக அவள்
இரவு வெகுநேரம் வேலை
செய்தாள்" என்று மரியா
சொன்னாள்.

"இது ஒரு ஆரம்பம்," என்றார்
அப்பா.



சூரியன் சுட்டெரித்தது.
இறுதியாக, இன்னொருவர்
நடந்து வந்தார்.

"அந்த நாற்காலி," என்றார் அவர்.
"அதற்குப் பதிலாக இந்த
அவரைக்காயையும் கொஞ்சம்
சோள விதைகளையும் உனக்குத்
தருகிறேன்." என்றார்.

" ஒப்புக்கொள்கிறேன்!" என்றார்
அப்பா.



பிறகு ஒருவர் அப்பாவிடம் பேசினார். “இந்த மனிதர் என் கருவிகளுக்காக இரண்டு கோழிகளையும் ஒரு புதிய வாணலியையும் தருவார்” என்று அப்பா மரியாவிடம் சொன்னார். “அவருக்கு ஒரு விவசாயியையும் தெரியும். நான் அவரிடம் சென்று சில வேலைகளைப் பற்றிப் பேச வேண்டும்” என்றும் அப்பா சொன்னார்.



"பால் என்ன ஆனது?" என்று மரியா கேட்டாள். "வெண்ணெயும் முட்டைகளும்?" அப்பா சிரித்துக்கொண்டே, ”கவலைப்படாதே, மரியா, நீ ஒரு நல்ல பண்டமாற்றம் செய்ய எனக்காக முயற்சி செய்!" என்றார்.



"நம்மிடம் மேசையும் சால்வையும் மட்டும்தான் இருக்கிறது," என்று மரியா பாக்கோவிடம் கூறினாள். “குழந்தை டினோவுக்காக அம்மா கேட்கும் பாலை நாம் எப்படிப் பெறுவது?”

சூரியனின் வெப்பம் அதிகரித்தது, ஆனால் அப்பா திரும்பி வரவில்லை. "யாருக்காவது அந்த சால்வை தேவைப்படலாம்" என்று மரியா பாக்கோவிடம் சொன்னாள். “ஒருவேளை மற்றவர்களின் கண்களில் படவில்லை என்று நினைக்கிறேன்!” என்று சொல்லிவிட்டு, மரியா அந்த சால்வையை வண்டியின் பக்கவாட்டில் விரித்தாள்.



ஒருவர் அதிலுள்ள பிரகாசமான பறவைகளைப் பார்த்து, *"அழகானவை"* என்றார். “அதற்குப் பதிலாக இந்த முட்டைகளைத் தந்துவிடுகிறேன்” என்றார்.




மரியா பாக்கோவின் பாதத்தை இறுக்கிப் பிடித்தாள். பிறகு, அப்பா செய்தது போலவே தலையை அசைத்தாள். "இவ்வளவு கடினமாக வியாபாரம் செய்ய நீ மிகவும் சிறியவளாக இருக்கிறாய்!" என்று அந்த மனிதன் சொன்னார். "நான் உனக்கு இந்த மாவையும் தருகிறேன்." என்றார்.

மரியா இசைவாக தலையசைத்து "அது நியாயமான வியாபாரம். – ஒப்புக்கொள்கிறேன்!
ஒப்பந்தம் முடிந்தது!" என்றாள்.
அவள் பாக்கோவின் பாதங்களைத் தட்டினாள். நமக்கு இன்னும் நிறைய மாவும் முட்டைகளும் கிடைத்துவிட்டன!
அப்பா மிகவும் பெருமைப்படுவார்!" என்றாள்.



அத்தியாயம் 4
பால் மற்றும் வெண்ணெய்





இளம் தம்பதியினர் ஒருவர், பால் குவளைகள் நிறைந்த தள்ளுவண்டியை இழுத்துக்கொண்டு நடந்து வந்தனர்.

"இன்று உங்களிடம் என்ன இருக்கிறது?" என்று அந்த மனிதன் பணிவாகக் கேட்டான். "எங்களிடம் இந்த மேசை இருக்கிறது," என்றாள் மரியா. "எங்களுக்கு ஒரு மேசை வேண்டும்," என்றார் அந்த மனிதர். அவர் மனைவி தலையசைத்தாள். தம்பி டினோவிற்கு தேவையான பால் கிடைக்கப் போகிறது என்று மரியாவுக்கு புரிந்தது, அந்தப் பெண்ணின் முகமும் பிரகாசமானது.

“இங்கே பார்! இது மிகேலுக்காக!” என்றான் அவன்.



மரியா சுட்டெரிக்கும் வெயிலில் உறைந்து போனாள். அவர்கள் பாக்கோவைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். "எங்கள் மகன் எங்களிடம் ஒரு பொம்மை கரடி வேண்டும் என்று கெஞ்சினான். அதை எங்களுக்குத் தருவீர்களா?", என்றான் அந்த மனிதன்.

பாக்கோ தனது நண்பன் என்றும், அவனைத் தன்னால் ஒருபோதும் கைவிட முடியாது என்றும் மரியா சொல்ல விரும்பினாள்.



"நான் மிகேலுக்காக ஒரு கரடியைச் செய்ய முயன்றேன், ஆனால் அது வெறும் துணியால் ஆனது," என்று அந்தப் பெண் கூறினாள். “அது உண்மையான கரடி அல்ல” என்று மிகேல் கூறினான். அவன் வீரர்களால் காயமடைந்தான். இனி அவனால் ஓடவோ விளையாடவோ முடியாது. அவனுக்குத் தேவையெல்லாம் ஒரு பொம்மை கரடிதான். நாங்கள் ஒரு கரடி பொம்மையை தேடிப் பார்த்தோம், ஆனால் கடைகளில் அதன் விலை மிகவும் அதிகமாக இருக்கிறது” என்றனர்.



"அவன் எங்கள் ஒரே மகன்," என்று அந்த மனிதன் கூறினான். “கடையில் வாங்க முடிந்தால் வாங்குவேன், ஆனால்.......”



மரியா குழந்தை டினோவைப் பற்றி நினைத்தாள். துப்பாக்கி ஏந்திய வீரர்கள் எப்போதாவது தன் வீட்டிற்கு வருவார்களா?


"நீ அந்தக் கரடிக்காக எதை பரிமாறிக்கொள்வாய்?" என்று அவள் கேட்டாள்.

அந்தப் பெண்ணின் குரல் நம்பிக்கையால் பிரகாசித்தது.

"மேசைக்காகவும் கரடிக்காகவும்," என்று மரியா மென்மையாகக் கூறினாள்.



அந்த மனிதன், "இரண்டு பவுண்டு வெண்ணெய், நான்கு பவுண்டு சீஸ், மற்றும் பால்" என்றான்.




அந்தப் பெண் அதிர்ச்சியுடன், "நம்மால் அவ்வளவு வியாபாரம் செய்ய முடியாது" என்றாள். "மிகேலுக்காக நம்மால் முடியும்" என்றான் அவன்.
" ஒப்புக்கொள்கிறேன் ," *என்று* மரியா கூறினாள். அவள் தனது கரடியை அந்தப் பெண்ணின் கைகளில் திணித்தாள்.

"நான் அவனை பாக்கோ என்று அழைப்பேன், மிகேல் அவனுக்கு வேறு பெயர் வைத்துக்கொள்ளலாம்." என்றாள் மரியா. "நன்றி," என்றாள் அந்தப் பெண். மரியா அந்தப் பெண்ணின் கைகளிலுள்ள



பாக்கோவை பார்க்காமல் இருக்க முயன்றாள்.




அத்தியாயம் 5
வீட்டிற்கு செல்லும் பயணம்

பாலும், சீஸும், வெண்ணெயும், முட்டைகளும் இருப்பதைக் கண்டதும் அப்பா சந்தோஷமாக நடனமாடினார்.



"பிரமாதம்!" என்று அவன் கூச்சலிட்டான். "இனி ஒவ்வொரு முறையும் நான் உன்னைச் சந்தைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்!" என்றார் அப்பா.

பிறகு “உனது குட்டி கரடி எங்கே? நீ அவனைத் தொலைத்து விட்டாயா?” என்று அப்பா கேட்டார். மரியா அழாமலிருக்க முயற்சித்தாள். “என்ன ஆச்சு, மரியா?” என்று வினவினார் அப்பா.



"அங்கே ஒரு சிறுவன் இருக்கிறான். அவனுக்கு ஒரு கரடி தேவை என்று அவனது அம்மா சொன்னார். அவனால் இனி ஓடவோ விளையாடவோ முடியாது” என்றாள் மரியா.




"அப்படியா, இப்படித்தான் நீ இவ்வளவு பண்டமாற்று செய்தாயா!," என்று சொல்லிவிட்டு அப்பா பெருமூச்சு விட்டார்.

"மரியா, நீ உறுதியாகச் சொல்கிறாயா? நான் ஓடிப்போய் உன் கரடியைத் திரும்ப எடுத்து வரட்டுமா?" என்று அப்பா கேட்டார்.
மரியா புன்னகைக்க முயன்றாள், ஆனால் அவளால் முடியவில்லை.
"மிகேலுக்கு அந்தக் கரடி பொம்மை தேவை, ஆனால் பொம்மை வைத்து விளையாடும் வயதை நான் தாண்டி விட்டேன், குடும்பத்திற்கு உதவும் அளவுக்கு நான் பெரியவள் ஆகி விட்டேன்" என்று அவள் சொன்னாள்.

.

அப்பா அவளை இறுக்கமாக அணைத்துக்கொண்டு, "மரியா, நீதான் நம் குடும்பத்தின் இதயம்" என்றார்.






வீட்டிற்குத் திரும்பும்
வழியில், மரியா அப்பாவின்
மீது சாய்ந்தாள். அவள்
பாக்கோவின் உரோமம்
நிறைந்த உடலை நினைத்து
ஏங்கினாள்.



அவள் அம்மாவையும், அவர்
வேலை செய்யும்போது எப்படி
முகம் சுளிப்பார் என்பதையும்
நினைத்துப் பார்த்தாள்.
"அம்மா, பாலும், சீஸும்,
வெண்ணெயும் பார்க்கும்போது
புன்னகைப்பார்," என்றாள்
மரியா.
"எனக்கும் நம்பிக்கை உள்ளது,"
என்றார் அப்பா.

அப்பா, அம்மாவையும்
டினோவையும் சிரிக்க வைக்க
எப்படி முயற்சி செய்தார் என்று
மரியா நினைத்துப் பார்த்தாள்.
அப்பா இப்போது
சிரிக்கவில்லை.
அவள் அவரை மேலும்
இருக்கமாக அணைத்துக்
கொண்டாள்.
அப்போது, ஒரு சிறுவன்
பாக்கோவை நோக்கி கையை
நீட்டுவதை மரியா தன்
இதயத்தில் கண்டாள்.
அந்தச் சிறுவனின் முகத்தில்
பிரகாசமான மகிழ்ச்சி
ஒளிர்ந்ததை அவள் கண்டாள்.
மரியா புன்னகைத்தாள்.





ஆசிரியரின் குறிப்பு

1980களில், எல் சால்வடார் மக்கள் ஒரு போர்ச்சூழலில் வாழ்ந்தனர். இந்தப் போர், அரசாங்கத்தை மாற்ற விரும்பிய கிளர்ச்சிப் படை வீரர்களுக்கும் அரசாங்க இராணுவத்திற்கும் இடையே நடந்தது. கொரில்லாக்கள் என்று அழைக்கப்பட்ட இந்தக் கிளர்ச்சிப் படை வீரர்கள், அரசாங்கம் ஏழை மக்களின் பிரச்சினைகளைப் புறக்கணிப்பதாகவும், இராணுவம் அரசாங்கத்தைப் பாதுகாப்பதாகவும் நம்பினர்.

கொரில்லாப் போர் என்பது பண்ணைகள், கிராமங்கள் மற்றும் நகர வீதிகளில் அடுத்தடுத்து நடந்த சிறிய பதுங்கித் தாக்குதல்கள் மற்றும் போர்களின் முடிவற்ற தொடராகும். கொரில்லாக்கள் கிராமப்புறங்களில் பதுங்கியிருந்து, இராணுவ வீரர்களைத் திடீரெனத் தாக்கி அவர்களுடன் சண்டையிட வெளியே வருவார்கள். இராணுவ வீரர்கள் அல்லாத மக்களும் பெரும்பாலும் இந்தத் தாக்குதல்களில் சிக்கிக்கொண்டனர். சிலர் எல் சால்வடாரிலிருந்து தப்பித்து, அவர்களில் பலர் அமெரிக்காவிற்கு வந்தனர்.

1990-களில், எல் சால்வடார் இறுதியாக கொரில்லாக்கள் மற்றும் இராணுவ வீரர்கள் இருவரையும் உள்ளடக்கிய ஒரு புதிய அரசாங்கத்தை அமைத்தது. மரியாவின் குடும்பத்தைப் போல அங்கேயே தங்கியிருந்த மக்கள், இந்தப் புதிய அரசாங்கம் எல் சால்வடாரின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தொடங்கியபோது, சண்டைகள் நின்றதைக் கண்டனர்.